1987 எப்ரல் 8]

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் மாஞ்சோலைத் தேயிலை எஸ்டேட்டில் உள்ள தேயிலைக் கம்பெனி தேயிலையைப் பக்குவப் படுத்த அருகிலுள்ள அரசுக் காடுகளிலிருந்து விறகு எடுக்கிறது என அரசுக்குப் புகார் ஏதும் வந்துள்ளதா என்பதுதான் வினா. புகார் வரவில்லை என்பதுதான் என்னுடைய பதில். நாகர் கோவில் வனத்துறைச் சரக அலுவலர் 3—4—86, 4—4—86, 5—4—86 ஆகிய நாட்களில் மாஞ்சோலை எஸ்டேட்டுக்கு உட்பட்ட எல்லாப் பகுதிகளையும் தணிக்கை செய்தார். அரசுக் காடுகளி லிருந்து எந்தவித விறகையும் எஸ்டேட் அதிகாரிகள் உபயோகப் படுத்தவில்லை என்று தெரிய வந்துள்ளது. மேலும் மாஞ்சோ லைக்கு உட்பட்ட காடுகளுக்கு எந்தவிதச் சேதமும் இல்லை. இருப்பினும், உஷாருடன் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, தற்போது வனத்துறையின் சார்பாக நடத்தப்படுகின்ற தேயிலைத் தோட்டக் கழகம் சிறப்பாகச் செயல்படுகிறது. ஆகவே ஏறத்தாழ 4,000 ஏக்கர் தேயிலை பரப்புள்ள அந்தத் தேயிலைக் கம்பெனியை அரசு கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே. இதுபற்றி தனியாகக் கேள்வி போடும்படி உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை பெரிய கோவிலுக்கு எதிரில் கடைகள் கட்டுதல்.

208—(*வினா எண். 9264) திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பெரியகோவில் எதிரில் கடைகள் கட்டுவதற் கான ஏற்பாட்டை அரசு செய்ய உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எந்த இடத்தில் ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சை பெரிய கோயிலுக்கு எதிரில் கடைகள் கட்ட கோயில் நிலம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கோவிலுக்குச் சொந்தமான இடத்திலே சுற்றுலாத் துறை மூலமாக அங்கே கடைகளைக் கட்டுவதற்கு, வெளிநாட்டு, உள் நாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கே அதிகமாக வருவதால், அது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: அவைத் தலைவர் அவர்களே, தஞ்சை நகராட்சியோ, அல்லது மற்ற வேறு அரசுத் துறையோ தான் கட்டவேண்டும். இது நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ரோடு ஓரங்களிலுள்ள இடம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று, கட்ட வேண்டும்.

புதுக்கோட்டையில் தொலைக்காட்சி நிலையம்.

209—(*வினா எண் 9792) திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் தொலைக்காட்சி நிலையம் அமைக் கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்போது செயல்படும்?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மின்னளவிகளின் வாங்கிய செலவை திரும்பிப் பெறும் முறை.

210—(*வினா எண் 10562) திரு. பி. கே. எம். முத்துராம லிங்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது 'மீட் டர்கள்' இருப்பு இல்லை என்ற காரணத்தால் வாடிக்கையாளர்